நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்
முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.
குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்.
2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 09-ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 806/2025
C.N.R.No.TNVP 36-003645-2026

அரசுக்காக.
காவல் ஆய்வாளர்,
கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு
குற்ற எண்.481/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி | சந்தரசேகர் (26/2025) த/பெ.மூவேந்தன், நெ.72, அவ்வைபுரம், செனாய் நகர், சென்னை. |

...... எதிரி

CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | Accused Remanded on 11-10-2025 and Released on Bail 24-10-2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 07-11-2025 Taken Cognizance on 07-11-2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Accused questioned on 16-03-2026 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the | Nil |

| | | |
|---|---|---|
| | Code: | |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and Cross examined on 17-03-2026<br>P.W.2 - Chief and Cross examined on 17-03-2026<br>P.W.3 - Chief and Cross examined on 15-05-2026<br>P.W.4 - Chief and Cross examined on 15-05-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.351(1)(b) of the Code | 21-05-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 07/11/2025 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.காத்தவராயன் அவர்கள் முன்னிலையாகி இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்

11/10/2025ம் தேதி 10:30 மணிக்கு பட்டானூர் சோதனை சாவடியில் மதுவிலக்கு வழக்கு சம்மந்தமாக வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி TN-02-BZ-6000 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற Ertiga காரில் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் தமிழக அரசால் தடைச்செய்யப்பட்ட அந்நிய மாநில மதுபானங்களான MC Dowells

Gold Indian Brandy 750ml – 40 Nos. மதுபாட்டில்களை தன்னுடைய சுயலாபத்திற்காக விற்பனை செய்யும் நோக்கில் கடத்தி வந்ததாக எதிரி மீது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் 4(1)(C), 4(1)(A), 14(A) TNP (Amendment) Act 2024-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் BNSS 230 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றத்தினை மறுத்தார். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரி மீது பிரிவு 4(1)(C), 4(1)(A), 14(A) TNP (Amendment) Act-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. தலைமை காவலர் குணசேரன் என்பவர் அரசு தரப்பில் விசாரிக்காமல் விலக்கிகொள்ளப்பட்டார். சான்று பொருள் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மதுபான பாட்டில்களின் புகைப்படம் ஆவணமாக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-

11/10/2025ம் தேதி 10:30 மணிக்கு கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் திருமதி.அறிவழகி என்பவருடன் தலைமை காவலர்கள் திரு.பசுபதி 2082 மற்றும் திரு.குணசேகரன் 2208 ஆகியோர்கள் மதுவிலக்கு வழக்கு சம்மந்தமாக பட்டானூர் சோதனை சாவடியில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது பாண்டிச்சேரி டூ திண்டிவனம் மார்க்கமாக வந்த TN-02-BZ-6000 என்ற பதிவெண் கொண்ட வெள்ளைநிற Ertiga காரை நிறுத்தி சோதனை செய்தபோது எதிரி பாண்டிச்சேரி மதுபான பாட்டில்களான MC Dowells Gold Indian Brandy 750 Ml – 40 Nos, ஆகிய பாட்டில்களை எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் வைத்திருந்த எதிரியை கைது செய்து தலைமை காவலர்கள் திரு.பசுபதி 2082 மற்றும் திரு.குணசேகரன் 2208 என்பவர்கள் முன்னிலையில் மேற்படி காரை (வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.2) மற்றும் MC Dowells Gold Indian Brandy 750 Ml – 40 Nos, பாட்டில்கள் (புகைப்படம் அ.சா.ஆ.3) எதிரியிடமிருந்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 தயார் செய்தார். அதில் தலைமை காவலர்கள் பசுபதி மற்றும் குணசேகரன் என்பவர்களின் கையொப்பங்கள் பெற்றார். பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலையக்குற்ற எண்.481/2025 பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), 14(A) TNP (Amendment) Act 2024-ன் படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்தார். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர்கள் திரு.பசுபதி மற்றும் திரு.குணசேகரன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துக்குமரன் மற்றும் பிரசாந்த் ஆகியோர் முன்னிலையில் மாதிரி

வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.6 தயார் செய்தார். அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். மேற்படி மதுபானபாட்டில்கள் மற்றும் TN-02-BZ-6000 என்ற பதிவெண் கொண்ட வெள்ளைநிற Ertiga காரை படிவம் 91 முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), 14(A) TNP (Amendment) Act 2024 Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6) இவ்வழக்கில் திரு.பசுபதி, தலைமை காவலர் அ.சா.1 ஆகவும், காவல் ஆய்வாளர் திருமதி.அறிவழகி அ.சா.2 ஆகவும், திரு.முத்துகுமரன் அ.சா.3 ஆகவும், திரு.பிரசாந்த் அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து BNSS பிரிவு 351(1)(b)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரி அரசு தரப்பு சாட்சிகள் கூறுவதை மறுத்து, தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

9) இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்யது யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

10) தலைமை காவலர் திரு.பசுபதி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில்

"கடந்த 11.10.2025 அன்று நான் கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தேன். அன்று 10:30 மணிக்கு

காவல் ஆய்வாளர் திருமதி.அறிவழகி தலைமையில் அவருடன் நானும் தலைமை காவலர் குணசேகரன் ஆகியோருடன் பட்டானூர் சோதனை சாவடியில் வாகன சோதனை செய்து கொண்டிருந்தபோது பாண்டி டூ திண்டிவனம் மார்க்கமாக TN-02-BZ-6000 வெள்ளை நிற எர்டிகா காரை நிறுத்தி தணிக்கை செய்தபோது அதில் இரண்டு நபர்கள் இறங்கி ஓட முயற்சி செய்தவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் சந்திரசேகர் த/பெ. மூவேந்தன் என்று கூறினார். அவர் ஓட்டி வந்த வாகனத்தை சோதனை செய்தபோது பாண்டிச்சேரி மதுபானங்கள் Mcdowells Gold Indian Brandy 750ml-40Nos, பாட்டில்கள் இருந்தது. மேற்படி பாட்டில்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட வாகனம் ஆகியவைகளை 10:50 மணிக்கு எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்பு காவல் ஆய்வாளர், எதிரி மற்றும் கைப்பற்றுதல் மகசருடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.481/2025 பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Amendment Actன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்" என்று சாட்சியமளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் கண்காணிப்பு பணியில் அ.சா.1 உடன் ஈடுபட்டதாக அரசு தரப்பில் சொல்லப்படும் காவல் ஆய்வாளர் திருமதி.அறிவழகி அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

12) பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 அவர்களது நீதிமன்ற சாட்சியத்தில் பார்வை மசரில் உள்ள கையொப்பத்தை சென்ற வருடம் மதியம் 03:00 மணியளவில் மொரட்டாண்டி பட்டானூர் டோல்கேட் அருகே மதியம் சாப்பிடுவதற்காக சென்று கொண்டிருந்தபோது அந்த இடத்தில் ஏதோ ஒரு காவல் நிலைய போலீசார் பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயார்

செய்த பார்வை மசரில் தாங்கள் கையொப்பம் செய்தோம் என்று சாட்சியமளித்துள்ளனர். அ.சா.3 மற்றும் அ.சா.4 அவர்களது குறுக்கு விசாணையில் கையொப்பம் எதற்காக பெற்றார்கள் என்ற விவரம் தங்களுக்கு தெரியாது என்றால் சரிதான் என்று முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர். அ.சா.3 மற்றும் அ.சா.4ன் சாட்சியங்களிலிருந்து அவர்கள் கையொப்பம் செய்தது பற்றி மட்டுமே சாட்சியமளித்துள்ளார்களோ தவிர அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை என்பது அவர்களது சாட்சியத்திலிருந்து புலனாகிறது.

13) அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் புதுச்சேரி - திண்டிவனம் சாலை அதிக வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான் என்றும், அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக தனது ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் தனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

14) அ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் அ.சா.1ன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளதிலிருந்து புலன் விசாரணை அதிகாரி எதிரியிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றினரா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளான பார்வை மகசர் சாட்சிகள் அவர்களது சாட்சியத்தில் எதற்காக கையொப்பம் பெற்றார்கள் என்ற விவரம் தங்களுக்கு தெரியாது என்று முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர் என்பதும் புலனாகிறது. எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியமளித்துள்ளபோதிலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 காவல்

துறையை சேர்ந்தவர்கள் ஆவர். இந்நிலையில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91ல் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யாமலும், புலனாய்வு அதிகாரி மேற்கொண்ட புலனாய்வில் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது. தனிநபர் சாட்சிகளான பார்வை மகசர் சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பிற்கு வலு சேர்க்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) இவ்வாறான சூழ்நிலையில் எதிரி மதுபான பாட்டில்கள் கடத்தி சென்றாரா என்பதிலும் ஐயம் நிலவுகிறது. எனவே புலனாய்வு அதிகாரி அவருக்கு புள்ளியியல் தேவைப்படுவதால் தவறான வழக்கை ஜோடித்துள்ளாரோ என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதை உறுதியூட்டும் விதத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்காதது இவ்வழக்கில் நம்பகதன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சியத்திலிருந்து எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலைகளில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாகமாக்கி எதிரியை இந்த வழக்கின் குற்றவாளி அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16) எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவாக</u>

17) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Amendment Actன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு

தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரியை மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18) இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.429/2025-ல் உள்ள MC Dowells Gold Indian Brandy 750 Ml – 40 Nos. மதுபான பாட்டில்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.6126/2020, 01-06-2020ன் வழிகாட்டுதல்களின் படி அழிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எண்.81/2026ல் உள்ள TN-02-BZ-6000 என்ற பதிவெண் கொண்ட வெள்ளைநிற Ertiga காரை அதன் உரிமையாளர் மனுதாக்கல் செய்து இந்நீதிமன்ற Crl.M.P.No.1130/2025 நாள் 13/11/2025 உத்தரவின்படி இடைக்காலமாக பெற்று சென்றுள்ளபடியால் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் வாகனத்தின் உரிமையாளரே மேற்படி வாகனத்தை நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு வாகனத்தின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

19) எதிரி ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 09-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.06.10 11:04:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

பின் இணைப்பு -

அரசுத்தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.பசுபதி, தலைமை காவலர் |
| அ.சா.2 | திருமதி.அறிவழகி, காவல் ஆய்வாளர் |
| அ.சா.3 | திரு.முத்துக்குமரன் |
| அ.சா.4 | திரு.பிரசாந்த் |

அரசுத்தரப்பு சான்றாவணம்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11/10/2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 11/10/2025 | காரின் புகைப்படங்கள் |
| அ.சா.ஆ.3 | 11/10/2025 | மதுபான பாட்டில்களின் புகைப்படம் |
| அ.சா.ஆ.4 | 11/10/2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 11/10/2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 11/10/2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | 14/10/2025 | படிவம் 91 மதுபான பாட்டில்கள் |
| அ.சா.ஆ.8 | 11/02/2026 | படிவம் 91 கார் |

அரசுத்தரப்பு சான்று பொருள் -

சா.பொ.1 TN-02-BZ-6000 என்ற பதிவெண் கொண்ட வெள்ளைநிற Ertiga கார்

எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.06.10 11:04:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.